செ.வெ.எண். 22/ஜனவரி பத்திரிக்கை செய்தி நாள் : 13.01.2016

**27-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு மாவட்ட காவல்துறை மற்றும் தருமபுரி வட்டார போக்குவரத்து அலுவலகம்,இணைந்து நடத்தி தலைகவசம் (ஹெல்மெட்) விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் ஜெ. லோகநாதன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.**





27-வது சாலை பாதுகாப்பு வார விழாவினை முன்னிட்டு மாவட்ட காவல்துறை மற்றும் தருமபுரி வட்டார போக்குவரத்து அலுவலகம் இணைந்து நடத்திய தலைகவசம் (ஹெல்மெட்) பேரணி இன்று (13.01.2016) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்து இருசக்கர வாகனத்தில் பங்கேற்றனர்.

தலைகவசம் (ஹெல்மெட்) பேரணி குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

இன்றைய தினம் 27-வது சாலை பாதுகாப்பு வார விழா 10.01.2016 முதல் 19.01.2016 வரை நடைபெற்று வருகிறது. இருசக்கர வாகன விபத்தை தவிர்க்கும் பொருட்டு இன்றைய தினம் (13.01.2016) தலைகவசம் (ஹெல்மெட்) விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. 2014 ஜனவரி முதல் 2015 டிசம்பர் வரை இருசக்கர வாகன விபத்தில் 144 பேர் இறந்துள்ளனர். 2015 ஜனவரி முதல் 2015 டிசம்பர் வரை இருசக்கர வாகன விபத்து சதவீதம் 85 ஆக குறைந்துள்ளது. அதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் காவல்துறை நண்பர்களுக்கும், வட்டார போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2014-ம் ஆண்டு ஒட்டுமொத்த வாகன விபத்து 377-ஆக இருந்தது. அதனை 50 சதவீதமாக குறைப்போம் என்று கடந்த ஆண்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது. அதனடிப்படையில் வாகன விபத்து 377 என்று இருந்ததை 297-ஆக குறைந்துள்ளது. மற்ற மாவட்டங்களை ஒப்பிடும் போது தருமபுரி மாவட்டத்தில் ஒட்டுமொத்த விபத்து மரணம் 30 சதவீதம் குறைந்துள்ளது. இருசக்கர வாகன ஓட்டிகள் விபத்து 41 சதவீதம் குறைந்துள்ளது.

இருசக்கர வாகன விபத்தை தவிர்க்கும் பொருட்டு மாவட்ட காவல் துறை தலைகவசம் (ஹெல்மெட்) அணியாமல் வாகனம் ஓட்டுபவரிடத்தில் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

அபராதம் விதிக்கப்பட்ட நபர் மீண்டும் தலைகவசம் (ஹெல்மெட்) அணியாமல் வாகனத்தை இயக்கினால் அபராத தொகை உயர்த்தி பெறப்படும். அதே நபர் தொடர்ந்து ஹெல்மெட் அணியாமல் வாகனத்தை இயக்கினால் அவரது வாகனத்தை உயர்நீதிமன்றத்தின் அறிவுரையின் படி வாகனம் பறிமுதல் செய்யப்படும். வாகன விபத்தை தவிர்க்கும் பொருட்டு அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்தக்கட்டமாக பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று மாணவ, மாணவிகளிடத்தில் சாலை பாதுகாப்பு விதிமுறைகளை கடைப்பிடிப்பது குறித்து வாசகம் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்க உள்ளோம். அதனை மாணவ, மாணவிகள் தங்களது காலணி அரை (Shoe Rack)-ல் ஒட்டி வைத்து அன்றாடம் அந்த வாசகங்களைப் படித்து தங்களது மனதில் பதிய வைத்து சாலை பாதுகாப்பு விதிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் பொதுமக்களிடத்தில் ஹெல்மெட் அணிவதன் அவசியத்தையும், வருங்காலங்களில் சாலை விபத்தினை தவிர்க்கும் பொருட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் சாலை பாதுகாப்பு குறித்த உறுதிமொழியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் அனைவரும் எடுத்துக் கொண்டனர். அதனை தொடர்ந்து சாலை பாதுகாப்பு சம்மந்தமாக பள்ளி மாணவ, மாணவர்களுக்கான பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, ஓவியப் போட்டி, சிறந்த சாலை பாதுகாப்பு வாசகம் எழுதும் போட்டிகளில் வெற்றி பெற்ற இலக்கியம்பட்டி அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலை பள்ளி, அதியமான்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, விஸ்வபாரதி மெட்ரிக் பள்ளி, ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகை, நினைவு பரிசு மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் வழங்கினார்கள்.

இப்பேரணி இலக்கியம்பட்டி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, நான்கு ரோடு, மதிகோண்பாளையம் வழியாக மாவட்ட விளையாட்டு அரங்கினை சென்றடைந்தது.

இப்பேரணியில் காவலர்கள், ஊர் காவல் படையினர், காவல் நண்பர்கள் குழு, தனியார் பயிற்சிப்பள்ளி, வட்டார போக்குவரத்து அலுவலக ஊழியர்கள், வாகனமுகவர்கள் உட்பட 1000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ஸ்ரீதர், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (பொ), திரு.இரா.செந்தில்வேலன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

தருமபுரி.